**Lanka Microfinance Practitioners' Association**

# கோவிட் -19 தொற்றுப் பரவலின்போது நுண்நிதி நிறுவனங்களின் கள செயற்பாடுகளின்போது பின்பற்ற வேண்டிய சுகாதார நடவடிக்கைகள்

லங்கா நுண்நிதி தொழில்முனைவோர் கழகம் (LMFPA), தமது அங்கத்தவர்கள் தங்களின் அலுவலகங்களை இயக்கும்போது அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள அனைத்து சுகாதார வழிகாட்டல்களை சரிவர பின்பற்றி நடக்குமாறு ஆணித்தரமாக ஆலோசனை வழங்குகின்றது. அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு மேலதிகமாக, கீழ்வரும் வழிகாட்டல்களை கள நடவடிக்கைகளின் போது கடைபிடிக்கும் பொருட்டு LMFPA வழங்குகின்றது.

**வாடிக்கையாளர் / பயனாளிகளை சந்தித்தல்**

1. முடியுமானவரை, வாடிக்கையாளர்களை தனித்தனியாக அவர்களின் வீடுகளில் அல்லது வியாபார ஸ்தானங்களில் சந்தித்து கடன் தொகை வசூலிப்பை அல்லது ஏனைய கள செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு நுண்நிதி நிறுவனங்களை ஊக்கப்படுத்துகின்றது.
2. வாடிக்கையாளர்களை தனித்தனியாக அவர்களின் வீடுகளில் அல்லது வியாபார ஸ்தானங்களில் சந்திக்க முடியாத நிலையிருப்பின், கீழ்வரும் செயற்பாடுகள் பரிந்துரைக்கப்படுகின்றன. (வாடிக்கையாளர்களை குழும / நிலைய சந்திப்புக்களில் சந்திக்கும்போது)

    அ. ஒரு வேளையில், மூன்று அங்கத்தவர்களை மாத்திரம் குழும / நிலைய சந்திப்புக்களில் சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்வதோடு, கடன் அறவீடு மற்றும் ஏனைய கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளை ஐந்து (5) நிமிடங்களுக்குள்ளால் செய்து முடித்து, அவர்களை அனுப்பிவிடவும். அதன்பின் அடுத்த மூன்று அங்கத்தவர்கள் தமது கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்கவும். இம்முறையில் 30 அங்கத்தவர்களை 50 நிமிடங்களில் சந்தித்துக் கொள்ளலாம்.

    ஆ. ஏனைய விடயங்களான கடன் விண்ணப்பம், புதிய கடன் பட்டுவாடா, மேலதிக கடன் தொகை, புதிய அங்கத்தவர் இணைத்தல் என்பன பற்றி இச்சந்திப்புக்களில் உரையாட வேண்டாம். அவ்வாறான விடயங்களை தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வினவுமாறு கேட்டுக் கொள்ளவும்.

**சேகரிப்பு மைய்ய பேணுகை**

1. ஒரு பெரிய கிருமி நீக்கி திரவ பாட்டிலொன்றை (Sanitizer) வைத்திருப்பதோடு, சமூகமளிக்கும் அனைத்து உறுப்பினர்களையும் ஆரம்பத்திலேயே கைகளிரண்டையும் கிருமி நீக்கம் செய்யுமாறு பணிப்பதோடு, கொடுக்கல் வாங்கலின் பின்பும் கைகளிரண்டையும் கிருமி நீக்கம் செய்யுமாறு பணிக்கவும்.
2. கிருமி நீக்கி திரவம் இல்லாத பட்சத்தில், கொடுக்கல் வாங்கலின் முன்பும் பின்பும் ஓடும் நீரில் சவர்க்காரம் கொண்டு கைகளிரண்டையும் நன்றாக கழுவுவதை உறுதிப் படுத்தவும்.
3. வாடிக்கையாளர் கடன் மீள்செலுத்தலுக்காக சமூகமளிக்கும்போது, முகக் கவசத்தை அணியுமாறு வேண்டவும்.
4. வாடிக்கையாளரிடமிருந்து ஏதாவது விசேட கோரிக்கைகளிருந்தால், அவற்றை தொலைபேசி மூலம் அறியத் தருமாறு கேட்டுக் கொள்ளவும் அல்லது எழுத்து மூலம் தருவதென்றால் ஒரு உறையில் இட்டு நன்றாக ஒட்டித் தருமாறு கேட்டுக் கொள்ளவும்.
5. சிறுவர்கள் மற்றும் ஏனைய குடும்ப உறுப்பினர்களை சேகரிப்பு மைய்யத்திற்கு அழைத்து வருவதை தவிர்க்கவும்.
6. வாடிக்கையாளர்களுக்கு தமது பிரத்யோக பேனைகளை உபயோகப்படுத்த ஊக்குவியுங்கள்.
7. தவணைக் கட்டணத்தை அறவிடும்போது, அந்த குறிப்பிட்ட தொகைக்கான சரியான காசுத் தொகையை மாத்திரம் (exact amount) சேகரிக்கவும். இல்லாவிடின்,

வாடிக்கையாளரின் அனுமதியுடன் முழுத் தொகையையும் மீளவசூலிப்பாக கருதி முழுத் தொகைக்குமான பற்றுச் சீட்டை வழங்கவும். அத்துடன் மிகுதித் தொகையை பெறுவது பாதுகாப்பற்றது என்பதை அவர்களுக்கு தெளிவுபடுத்தவும்.

**கள உத்தியோகத்தர்கள்**

1. வசூலிக்கப்படும் பணத்தை இடுவதற்காக தனியாக ஒரு பையை பாவிப்பதோடு, குறிப்பிட்ட அந்த பையில் வேறு எந்த ஆவணங்களையும், காகிதம் முதலிய எழுது பொருள்களையும் இட வேண்டாம்.
2. முகக் கவசத்தை (Face Mask) அணியத் தவறாதீர்கள், அத்துடன் முடியுமானால் முகப் பாதுகாப்பு கவசத்தை (Face Shield) அணியவும்.
3. இரு கரங்களிலும் கையுறைகளை அணியுங்கள்.
4. பாக்கெட் சுத்திகரிப்பு திரவ பாட்டிலை (sanitizer) உங்களுடன் வைத்திருப்பதோடு, அனைத்து சந்திப்புக்களின் முன்னரும் பின்பும் உங்கள் கரங்களை சுத்தப்படுத்த தவறாதீர்கள்.
5. வாடிக்கையாளர் சந்திப்பின் பின் நீங்கள் வெளிச்செல்லமுன், உங்கள் பேனை, கால்குலேட்டர், pos உபகரணம் மற்றும் ஏனைய அனைத்து உபகரணங்களையும் கிருமிநீக்கம் (sanitize) செய்யவும்.

**பொதுவான செய்ய வேண்டியவை மற்றும் தவிர்க்க வேண்டியதுமான செயற்பாடுகள்**

**செய்ய வேண்டியவை**

1. முடியுமான அனைத்து நடவடிக்கைகளின் போதும், வாடிக்கையாளர்களை / உறுப்பினர்களை தனித்தனியாக சந்திக்கவும்.
2. அனைத்து சந்தர்ப்பங்களின் போதும் தேவையான சமூக இடைவெளியை (1.5 m) பேணவும்.
3. நீண்டகால தொழிற்பாட்டை கருத்திற்கொண்டு டிஜிட்டல் முறையில் அறவீடுகளை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளவும்.
4. காரியாலயத்திலிருந்து வெளிச்செல்லும் முன்பும், காரியாலயத்திற்கு மீண்டும் வரும்போதும், கைகளிரண்டையும் நன்றாக கழுவிக் கொள்ளவும்.

**தவிர்க்க வேண்டியவை**

1. தொழில் நிமித்தம் நீங்கள் விஜயம் செய்யும் வியாபார ஸ்தானங்களிலோ அல்லது வீடுகளிலோ 40 நிமிடங்களுக்கு மேலாக தரித்திருக்க வேண்டாம்.
2. முகக் கவசமின்றி வாடிக்கையாளர்களை அவர்களின் வீட்டிலாயினும் உங்களுடன் உரையாட அனுமதிக்க வேண்டாம்.
3. குழுமம் / நிலையத்திற்கு மூன்றுக்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் ஒரே நேரத்தில் வருகை தருவதை அனுமதிக்க வேண்டாம்.
4. உத்தியோகத்தர்கள், ஏனைய சக உத்தியோகத்தர்களின் கைபேசி, பேனை, மற்றும் ஏனைய தொழில் சார் உபகரணங்களை உபயோகப்படுத்துவதிலிருந்து முடியுமானவரை தவிர்த்துக் கொள்ளவும்.
5. சுவாசப் பிரச்சினை காரணிகளான இருமல், சளி, தொண்டை அழற்சி, மூச்சுத் திணறல் ஆகியவற்றுடன் கூடிய காய்ச்சல் அல்லது சாதாரண காய்ச்சல் ஏற்பட்டிருந்தாலோ அல்லது கோவிட் -19 தொற்றுக்குள்ளானவர் என சந்தேகிக்கப்படும் அல்லது ஊர்ஜிதப்படுத்தப்பட்ட நபரோடு கடந்த 14 நாட்களுக்குள் தொடர்பு கொண்டிருந்த உத்தியோகத்தர் வேலைக்கு சமூகமளிப்பதை தவிர்க்கவும்.

**கள உத்தியோகத்தர்களால் எடுத்து செல்லவேண்டிய மேலதிகப் பொருட்கள்**

- பாக்கட் சுத்திகரிப்பு திரவ பாட்டில் (Sanitizer)
- கள வசூலிப்பு மைய்யத்தில் உபயோகப்படுத்துவதற்கான பெரிய சுத்திகரிப்பு திரவ பாட்டில்
- உபயோகப்படுத்தும் முகக் கவசத்துக்கு மேலதிகமாக கைவசம் இன்னொரு முகக் கவசம்